பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
15 09 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, முப்படை கமாண்டர்கள் மாநாட்டை இன்று கொல்கத்தாவில் தொடங்கி வைக்கிறார்.
- 2047-ம் ஆண்டுக்குள் 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு.பியூஷ் கோயல் கூறியுள்ளார்.
- தமிழக காவல்துறை மற்றும் சீருடைப் பணியாளர்கள் 193 பேருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- திமுக ஆட்சிக்கு எதிரான அனைத்து தரப்பினரும் ஓரணியில் இணைவது அவசியம் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
- ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மேற்குவங்கம் மற்றும் பீஹார் மாநிலங்களில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், முப்படை கமாண்டர்களின் மூன்று நாள் மாநாட்டை தொடங்கி வைக்க கொல்கத்தா சென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் பீஹாரின் பூர்ணியா விமான நிலைய புதிய முனையத்தை திறந்து வைப்பதுடன், சுமார் 36 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தொடங்கி வைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பூர்ணியாவில் தேசிய மக்கனா வாரியத்தை தொடங்கி வைக்க உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், இந்த வாரியம் பீஹார் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

<<<<>>>>

2047-ம் ஆண்டுக்குள் 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று, மத்திய வர்த்தக - தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில், தனியார் ஊடக நிறுவன மாநாட்டில் பேசிய அவர், பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி உள்ளதாக தெரிவித்தார்.

சிறு, குறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் அவர் எடுத்துரைத்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், வரிவிதிப்பு முறையை எளிமைப்படுத்தியிருப்பதாக குறிப்பிட்ட திரு.பியூஷ் கோயல், இது, ஊழலற்ற மற்றும் இடைத்தரகர்களின் தலையீடு இல்லாத நிலையை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரையின் பிறந்தநாளையொட்டி, காவல்துறை மற்றும் சீருடைப் பணியாளர்கள் 193 பேருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதன்படி காவல்துறையில், தலைமைக் காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் 150 பேருக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை, தடய அறிவியல் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 43 பேருக்கும், அவர்களது சிறப்பான பணியைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட உள்ளது.

இதுதவிர, பல்வேறு சம்பவங்களின்போது சிறப்பாக பணியாற்றிய தீயணைப்புத் துறையைச் சேர்ந்த மூவருக்கு, தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர பதக்கம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த பதக்கங்கள், மற்றொரு விழாவில், முதலமைச்சரால் வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோவை அவினாசி சாலையில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட மேம்பாலம் அடுத்த மாதம் 9ஆம் தேதி திறந்து வைக்கப்படும் என்று பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

கோவையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காந்திபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரியார் நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளதாக கூறினார்.

இந்த நூலகக் கட்டிடம் பொங்கலுக்கு முன்பாக திறக்கப்படும் என்றும் திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட அனைத்து தரப்பினரும் ஓரணியில் இணைவது அவசியம் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக அரசு செயல்படாத அரசாக உள்ளதால் மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் தயாராக இருப்பதாக கூறினார்.

பிஜேபியின் வாக்கு வங்கி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், திமுகவின் வாக்கு வங்கி குறைந்து கொண்டிருப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

*(சவுண்ட் பைட் (1) Intro Tune - 6 வினாடிகள்)*

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

*இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது தூய்மை இந்தியா இயக்கம்.*

*(சவுண்ட் பைட் (1) மியூசிக் - 10 வினாடிகள்)*

*தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டு பதினொரு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.*

*நவீன கழிவறைகள் கட்டுவதன் மூலம் தூய்மைப் புரட்சி பற்றிய குரல் செங்கோட்டையில் இருந்து எழும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.*

*ஆனால் ஆகஸ்ட் 15, 2014 அன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தூய்மை இந்தியா இயக்கத்திற்கான அறிவிப்பை வெளியிட்டார்.*

*(சவுண்ட் பைட் (2) பிரதமர் உரை - 22 வினாடிகள்)*

*தூய்மை இந்தியா இயக்கம் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. அதை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.*

*நாட்டில் திறந்தவெளி கழிவறை இல்லாத நிலை ஏற்பட்ட பிறகு நிகழ்ந்த மாற்றங்கள் குறித்து பிரபல சர்வதேச இதழான Nature சமீபத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.*

*கலிஃபோர்னியா பல்கலைக்கழகம் மற்றும் ஓஹியோ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில், தூய்மை இந்தியா இயக்கம் மூலம் ஆண்டுதோறும் சுமார் 70 ஆயிரம் உயிரிழப்புகள் வெற்றிகரமாக தடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.*

*இந்த இயக்கம் பல பெண்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளது.*

*(சவுண்ட் பைட் (3) பெண் பயனாளி - 22 வினாடிகள்)*

*இந்த இயக்கத்தின் வெற்றி, சுமார் 12 கோடி வீடுகளில் நவீன கழிவறைகள் கட்டப்பட்டு, திறந்தவெளி கழிப்பிடத்தால் ஏற்படும் தீமையிலிருந்து நாட்டை விடுவித்துள்ளது நிரூபனமாகியுள்ளது.*

*நாட்டில் சுமார் 78 சதவீத வீடுகளுக்கு குழாய் மூலம் தூய்மையான குடிநீர் வழங்கப்படுகிறது.*

*2026ஆம் ஆண்டுக்குள் நாட்டில் உள்ள நகரங்களை குப்பை இல்லாத நகரங்களாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*ஆண்டுதோறும் தூய்மை ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.*

*இது பல்வேறு நகரங்களுக்கு இடையே நேர்மறையான போட்டிக்கு வழிவகுத்தது. மக்களின் பங்கேற்பும் அதிகரித்துள்ளது.*

*இதன் விளைவாக, தூய்மையை பராமரிப்பதில் நம் நாட்டின் மீதான பார்வை கடந்த காலத்தை விட கணிசமாக மேம்பட்டுள்ளது.*

*(சவுண்ட் பைட் (1) Clsoing Tune - 7 வினாடிகள்)*

*<<<<>>>>*

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*ஆஃப்கனிஸ்தானில் இருந்து தஞ்சமடைய வருவோரை திருப்பி அனுப்புவதை கைவிடுமாறு பாகிஸ்தானை, அகதிகளுக்கான ஐ.நா. ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*<<<<>>>>*

*ஹமாஸ் அமைப்புடனான போர் முடிந்த பிறகு இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பிய பொருளாதார பெருவழித்தட பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.*

*<<<<>>>>*

*குஜராத் ஆளுநர் திரு. ஆச்சார்யா தேவ் விரத் மகாராஷ்டிர ஆளுநராக இன்று கூடுதல் பொறுப்பேற்கிறார்.*

*<<<<>>>>*

வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைவதாகவும், இது மேலும் நீட்டிக்கப்படாது என்றும் வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தஞ்சை மாவட்டம் புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் தேரோட்டம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பேரிஜம் ஏரி வனப்பகுதியில் யானைகள் நடமாட்டம் இருப்பதால் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிக்குச் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலை வேத ஆகம ஆன்மிக கலாச்சார மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற ஆயிரத்து 8 குத்து விளக்கு பூஜையில் ஏராளமான சுமங்கலிப் பெண்கள் பங்கேற்று வழிபட்டனர்.

<<<<>>>>

தென்காசியில் கிருஷ்ணஜெயந்தியை முன்னிட்டு குழந்தைகள் ராதை, கிருஷ்ணர் உள்ளிட்ட பல்வேறு வேடமணிந்து ஊர்வலமாக சென்றனர்.

<<<<>>>>

மும்பையில் இருந்து அரக்கோணம் வழியாக ரயிலில் கடத்தி வரப்பட்ட போதை மாத்திரைகளை பறிமுதல் செய்த காவல்துறையினர்இதுதொடர்பாக 2 பேரை கைது செய்தனர்.

<<<<>>>>

மயிலாடுதுறையில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் ஏராளமானோர் பங்கேற்று கண் பரிசோதனை செய்துகொண்டனர்.

<<<<>>>>

## விளையாட்டுச் செய்திகள்

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவலில் 9 விக்கெட் இழப்புக்கு 127 ரன் எடுத்தது.

128 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 15 புள்ளி 5 ஓவரிலேயே 3 விக்கெட் இழப்புக்கு 131 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

சூர்யகுமார் யாதவ் அதிகபட்சமாக 47 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

<<<<>>>>

ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

இந்திய அணியின் வெற்றிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இஸ்தான்புலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 12-10, 11-7, 11-7 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Okano Shunsuke-ஐ வென்றார்.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

*இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 78 கிலோ எடைப் பிரிவில் Ishroop Narang வெள்ளிப் பதக்கம் வென்றார்.*

*Chanu Khaidem 70 கிலோ பிரிவிலும், Kanwarpreet Kaur 78 கிலோ எடைப் பிரிவிலும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.*

<<<<>>>>